## தந்தையை தளபதி

# சிறையில் வைக்கவில்லை! சிறகில் வைத்திருந்தார்!

## கவிப்பேரரசு வைரமுத்து உருக்கம்!

கடைசிக் காலத்தில்
கலைஞர்
சிறைப்படுத்தப்பட்டிருந்தார்
என்ற அரசியல் கூற்று
உண்மைக்கு மாறானது

அதற்கு
நானும் ஒரு சாட்சி

கலைஞரின் உடல்நிலை
மருத்துவத்தின் கைகளுக்கு
மாறிவிட்டது

முதுமை நோயுடைமை
தொண்டைத் துளை
பேச்சின்மை
மருந்துகளின் தாக்கம்
போன்ற காரணங்களுக்காக
மருத்துவர்களின் அறிவுரையைத்
தளபதி மு.க.ஸ்டாலின்
கவனமாகப் பின்பற்றினார்

நோய்த்தொற்றைத் தடுக்கவே
பார்வையாளர்கள்
ஒழுங்குபடுத்தப்பட்டனர்

அவர் ஆயுளை நீட்டிக்கவே
கட்டுப்பாடுகள் திட்டமிடப்பட்டன

வாரம் ஒருமுறை
அல்லது இருமுறை
நான் கலைஞரைச்
சந்திக்கும் வாய்ப்பை
யாரும் தடுக்கவில்லை

மென்மையாய்;
மிக மென்மையாய்
அவர் கையாளப்பட்டார்

கலைஞர் இரண்டாம்
குழந்தை நிலையில் இருந்தார்

தொட்டில் என்பது
ஒரு குழந்தைக்குச்
சிறையாகிவிடாது

தந்தையைப் பிள்ளைபோல்
பாதுகாத்தார் தளபதி

தந்தையை அவர்
சிறையில் வைக்கவில்லை;
சிறகில் வைத்திருந்தார்

தமிழர்கள் அறிவார்களாக



**கவிப்பேரரசு வைரமுத்து**

## நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலை

# UDAN திட்டம்: வளர்ச்சிக் கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



நாமக்கல், ஏப். 6 -

UDAN திட்டத்தின் செயல்பாடு மற்றும் TierII, TierIII நகரங்களில் அதிகரித்து வரும் விமான நிலைய நெரிசல் குறித்தும், விமான கட்டணம் குறையும் என சொன்ன அரசு நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலையால் UDAN திட்டம்: வளர்ச்சி கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா? என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

2025-26 ஆம் ஆண்டில் UDAN திட்டத்தின் கீழ் ஹெலிபோர்ட்கள் மற்றும் நீர்வழி விமான தரிப்பிடங்கள் முழுமையாக செயல்படுத்தப்படாததற்கான காரணங்கள் என்ன? நிலம் கையகப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி தாமதங்களை சரிசெய்ய அரசு நிர்ணயித்த காலக்கெடு என்ன?

மேலும், TierII மற்றும் TierIII நகரங்களில் உள்ள முக்கிய விமான நிலையங்கள் 85% முதல் 120% வரை தங்களின் திறனை மீறி செயல்பட்டு பயணிகள் நெரிசல் அதிகரித்துள்ளது உண்மையா? என எழுப்பினார். அத்துடன், “விமான சொத்து உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 2025” செயல்பாடு என்ன நிலையில் உள்ளது? இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டதிலிருந்து விமான நிறுவனங்களின் குத்தகைச் செலவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? விமான கட்டணம் குறையும் என சொன்ன அரசு, விமான நிலையங்களில் நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. UDAN திட்டம்: வளர்ச்சி கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா?, சிறிய நகரங்களில் உள்ள விமான சரக்கு நிலையங்களுக்கு 2026-27 ஆம் ஆண்டிற்கான CCRC நிதி உதவி விவரங்களையும் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோகோல், 2025-26 ஆம் ஆண்டில் UDAN திட்டத்தின் கீழ் அமராவதி, தாதியா, பூர்னியா, ரெக்காங் பேயோ மற்றும் சஞ்சோலி உள்ளிட்ட 5 விமான நிலையங்கள் மற்றும் 38 விமானப் பாதைகள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விமான நிலை யங்களில் பயணிகள் வரத்து காலநிலை, திருவிழா மற்றும் விடுமுறை காலங்களைப் பொறுத்து மாறுபடும் என்றும், உச்ச நேரங்களில் தற்காலிக நெரிசல் ஏற்படுவது இயல்பானது என்றும் அவர் கூறினார்.

அதே நேரத்தில், பயணிகள் வசதிக்காக விமான நிலைய நிர்வா கங்கள் தொட ர்ந்து கண்காணிப்பு மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்றும் விளக்கினார்.

மேலும், “விமான சொத்து உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 2025” தொடர்பான விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் விமான குத்தகைச் செலவுகள் 8% முதல் 10% வரை குறைய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது விமான சேவைகளில் போட்டியை அதிகரித்து, பயணிகள் மற்றும் சரக்கு கட்டணங்களை குறைக்கும் என்றும் அவர் கூறினார்.

இதனுடன், 2026-27 நிதியாண்டிற்காக AAICLAS நிறுவனத்தின் சர்வதேச சரக்கு சேவைகளை ஆதரிக்க ரூ.30.33 கோடி CCRC நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறி ப்பிட்டார்.

# மலிவும் மடப்பாடியும்!



ரத்த உறவும்
பெத்த புள்ளயும்
இல்லாத ஒருவரது
அந்திம காலம்
எவ்வளவு
கொடுமையானது
என்பதற்கு
அம்மாவின்
இறுதிக் காலமும்...

பெத்த புள்ளையும்
ரத்த உறவும்
அன்பே வடிவாகி இருந்தால்

ஒருவரது
அந்திம காலம்
எப்படி பாசத்தால் நிறைந்து ததும்பும்
என்பதற்கு
முத்தமிழ் அறிஞர் கலைஞரின்
முதுமைக் காலமுமே சாட்சி..
இதனை
உலகமே அறியும்...

அதனால..

வாய்க்குள்
அடங்காத
பல்லோடும்
வாய்மைக்கு
அடங்காத
சொல்லோடும்

நாகரீகமற்று
மலிவாகப்
பேசுவதை
திருவாளர்
மடப்பாடி
நிறுத்திக் கொள்வது உத்தமம்...

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, முதல்கட்ட பரப்புரையை முடித்துள்ள நிலையில், 2–ஆம் கட்டமாக தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரி மாநிலத்திலும் அவர் மேற்கொள்ள உள்ள பரப்புரை பயண விவரம் வருமாறு :

**6.4.2026 திங்கள்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருவையாறு | தேரடி திடல், திருவையாறு. |
| காலை 11.30 மணி | கும்பகோணம் | காந்தி பார்க், கும்பகோணம். |
| மாலை 4.00 மணி | திருவிடைமருதூர் | கடைவீதி, பந்தநல்லூர். |
| மாலை 5.00 மணி | ஜெயங்கொண்டம் | அண்ணா சிலை அருகில், ஜெயங்கொண்டம். |
| மாலை 6.30 மணி | குன்னம் | கடைவீதி, குன்னம். |
| இரவு 8.00 மணி | உளுந்தூர்பேட்டை | அண்ணா சிலை அருகில், உளுந்தூர்பேட்டை. |

**7.4.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தொகுதிகள் | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர். | மரப்பாலம், முதலியார்பேட்டை. |
| காலை 10.45 மணி | வில்லியனூர், திருபுவனம், மங்கலம். | கிழக்கு சந்நிதி வீதி, வில்லியனூர். |
| காலை 11.30 மணி | நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்காமம், ராஜ்பவன். | அண்ணா சிலை எதிரில், அண்ணா சாலை, புதுச்சேரி. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை–18

கலைஞர் 100
1924 - 2023



# பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் மருத்துவர் ச.த.ஜெயலெட்சுமி மனு தாக்கல்!


பெரம்பலூர், ஏப். 6 -

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி (தனி) வேட்பாளர் ச.த.ஜெயலெட்சுமி, பெரம்பலூர் தேர்தல் அதிகாரியும் கோட்டாட்சியருமான அனிதாவிடம் நேற்று முன்தினம் (04.04.2026), வெள்ளிக்கிழமை அன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அதன்பிறகு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ரிங் ரோடு, சின்னமுட்லு நீர்த்தேக்கம், பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள் மற்றும் நகரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மேம்பாலங்கள் கொண்டு வர பாடுபடுவேன் என்றும் 42 ஆண்டுகளுக்கு பிறகு பெண்களுக்கு இந்த தொகுதியை தி.மு.க. தலைமை ஒதுக்கியுள்ளது. இது பெண்கள் மத்தியில் ஆதரவாக உள்ளது எனவும் கூறினார். அப்போது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், காங்கிரஸ் கட்சி மாநில செயலாளர் வழக்கறிஞர் த.தமி ழ்செல்வன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்ட செயலாளர் சர்புதீன், ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் ஜெயசீலன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார், தலைமை செயற்குழுவின் உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நா. புகழேந்தி**
**ஏப்ரல் 6 (2024)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் கிளைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியப் பொறுப்பாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட அவைத்தலைவர், பின்னர் இரண்டு முறை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்ற தலைவராவும் – ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“மக்களோடு மக்களாக வாழ்ந்த புகழேந்தி அவர்களது மறைவு, விக்கிரவாண்டி தொகுதிக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் மட்டுமின்றி, கழகத்திற்கும் பேரிழப்பாகும்” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**